ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேதஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

நல்ல குலத்திற்பிறப்பும், தீர்காயுஸ்ஸோடிருப்பும், விஷயஸம்பந்தத்தாலேற்படும் ஸுகதுக்கானுபவங்களும் கர்மாவென்னும் மூலகாரணத்தாலேற்படுவதாக சாஸ்திரமெல்லாமொரேவிதமான கருத்துடன் கூறுகின்றது. முன் ஜன்மங்களில்செய்த கர்மங்கள்தான் மறுபிறப்பு முதலியவைகளுக்குக் காரணமாகவேண்டும் அதேபிறப்பில்செய்த கர்மம் அதேபிறப்புக்குக் காரணமாகாது. காரணமென்பது காரியத்திற்கு முன்னிருக்கவேண்டியதவசியமன்றோ? அதனாற்றான் ஸம்ஸாரமும் கர்மங்களும் அனாதியென்று சாஸ்திர ஸித்தாந்தம். அதனாற்றான் பிறப்பு முதற்கொண்டே சிலர் ஸ்ரீமான்களாயும், சிலர் தரித்திரர்களாயும், சிலர் திடகாத்திரமுள்ளவர்களாயும், சிலர் நோயாளிகளாயும் சிலர் அல்ப்பாயுஸ்ஸாயும், சிலர் தீர்க்காயுஸ்ஸாயும் சிலர் நல்ல இந்திரிய சத்தியுள்ளவர்களாயும், சிலர் கூன் குருடு, செவிடுகளாயும் காணப்படுகிறார்கள். பிறப்புமுதற்கொண்டே காணப்படுமிந்த வித்தியாஸத்திற்குக் காரணம் அதற்குமுந்தியே இருக்கவேண்டியதுதான் உசிதம். அப்படியிருக்கையில் தற்காலத்திய மேதாவிகள் கர்மாவை ஆதரிப்பதில் கெவனம் செலுத்தாததோடு மாத்திரமாயிராமல் அதனிடம் துவேஷத்தையும் பாராட்டுகிறார்கள். மானிடப்பிறப்பு கிடைத்திடும்பொழுது அதற்குறிய கர்மத்தைச் செய்யாமல் கண்டபடியெல்லாம் நடந்துவந்தால் சித்திரகுப்தன் அதைமாற்றி எழுதுவானோ? அதைப்பார்த்துப் பலனையளிப்பவர் கண்டபடி பாபத்தைச் செய்தவர்களுக்கும் புண்ணியத்தின் பயனைக் கொடுப்பாரோ? வர்ணாசிரம தர்மவியவஸ்தையை மாற்றிவிடவேண்டுமென்ற இவர்களது எண்ணத்தை பலதாதாவான பரமேசுவரனும் வேதவாயிலாக தான் ஆக்ஞைசெய்த தர்மாதர்ம வியவஸ்தையை மறந்து சம்மதித்திடுவாரோ! ஒருபொழுதுமப்படி நேரிடாது. பிராணிகள் பசி பசியென்றுபிழைபுக்குவழியில்லாமல் பரிதவிக்கும்பொழுது தர்மமென்றும் அதர்மமென்றும் இந்த பழைய பேச்சையே பேசிக்கொண்டிருப்பதாலென்னபயன்? என்று சிலர் கேட்பார்கள். தர்மாதர்மத்தை மதிக்காத மஹாபாதகத்தாற்றான் பசியென்ற பிசாசு பிடித்தாட்டுகிறது. அந்தப் பிசாசைவெறட்ட தர்மாதர்ம வியவஸ்தையென்ற மஹாமந்திரம்தவிர வேறில்லை, என்பதை அவர்களுக்கு அறிவிக்கிறோம். நம் முன்னோர்கள் பசியையடக்கி பிராஜாபத்தியம் சாந்திராயணம் முதலிய கிருச்சிரங்களை அனுஷ்டித்துத் தர்மத்தையே பெரிதாகப் பரிபாலித்து வந்தார்கள். அதனால் பசி அவர்களைப் பாதிக்கவில்லை. தற்காலத்திய யுத்திமான்களுமதையே பின்பற்றி பசிப்பிணியை மாற்றிக்கொண்டு ஸௌக்கியமாயிருப்பார்களாக. சுபம்.

பத்திராதிபர்,

# புண்ணியாத்துமாக்களிருப்பிடம்.

பதினான்கு லோகங்களடங்கிய இந்தப்பிரமாண்டம் ஆகாயத்தில் மின்மினிப்பூச்சிபோல் *பிரதானமெனப்படும் மாயாசக்தியின் பரமாணுப்போன்ற சிறியதோர் அவயவமாம். அதில் பாதாளத்திலும், மஹாஸமுத்திரத்திலும், பர்வதங்களிலும் சில தேவர்களும், அஸுரர், கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர், யக்ஷர், ராக்ஷஸர், பூதகணங்கள், பிசாசங்கள், அபஸ்மாரங்கள், அப்ஸரஸ்ஸுகள், ப்ரம்மராக்ஷஸர்கள் முதலியபிராணிகளும் வஸிக்கின்றார்கள். எல்லாத்துவீபங்களிலும் புண்ணியாத்துமாக்களான தேவர்களும், மனுஷ்யர்களுமிருக்கின்றார்கள். பூமியில் மேருபர்வதமென்பது தேவர்களுக்கு உத்யான பூமியாம். ஆங்கு மிச்ரவனம், நந்தனவனம், சைத்திரதம், ஸுமானஸமென்ற சிங்காரத்தோப்புகளிருக்கின்றன. சுவர்க்கத்தில்போலவே ஸுதர்மையென்ற தேவஸபையும், ஸுதர்சனமென்ற பட்டணமும், வைஜயந்தமென்ற மாளிகையுமிருக்கின்றன. சூர்யாதிக் கிரஹங்களின் மண்டலங்களும், நக்ஷத்திர மண்டலங்களும், துருவஸ்தானத்தில் கட்டப்பட்டு ஓரேவிதமாக அசைகின்ற வாயுவினால் ஒரு கணக்காக அசைக்கப்பட்டு மேருபர்வதத்தின் மேலுக்குமேலாக அமைக்கப்பட்டு ஆகாயத்தில் சுற்றிவருகின்றன. கர்மாக்களின் பயனை அனுபவிக்கும் சிலர் அங்கிருக்கிறார்கள். இது புவர்லோகமெனப்படும் அந்தரிக்ஷலோகமாம். அதற்குமேல் ஸுவர்லோகமெனப்படும் சுவர்க்கலோகமிருக்கின்றது. அதில் திரிதசர்கள், அக்னிஷ்வாத்தாள், யாம்யர்கள், துஷிதர்கள், இருவகைப்பட்ட வசவர்த்திகள், என்ற ஆறுவகைப்பட்ட தேவஜாதிகளிருக்கிறார்கள். அவர்களெல்லோருக்கும் சங்கற்பித்தமாத்திரத்தாலேயே ஸகல விஷயங்களும் கிடைக்கும். அவர்களெல்லோ

ரும் அணிமாதி அஷ்டமஹாஸித்தியுள்ளவர்கள். பிரம்மகல்பம் (ப்ரம்மாவின்தினம்) பூராவாக ஆயுஸ்ஸுள்ளவர்கள். எல்லோராலும் பூஜிக்கத்தக்கவர்கள். மாதாபிதாக்களின் சேர்க்கையை அபேக்ஷிக்காமலே இஷ்டப்படி கிடைக்கின்ற சரீரமுள்ளவர்கள். ஸம்போகத்திலேயே பிரியப்பட்டவர்கள், அனுகூலைகளான உயர்ந்தஅப்ஸரஸ்ஸுகள் பரிசாரணைசெய்யும் பாக்கியம்பெற்றவர்கள். அதற்குமேல் மஹர்லோகம். அதில் குமுதர், ரிபுக்கள், பிரதர்த்தனர்கள், அஞ்சனாபர்கள், பிரசிதாபர்கள் என்றஐந்துதேவ ஜாதிகளிருக்கின்றார்கள். இவர்களுக்கு மஹாபூதங்கள் ஸ்வாதீனமாயுள்ளவைகள். தியானத்தையே ஆஹாரமாகக்கொண்டவர்கள். ஆயிரம் கல்ப்பம் ஜீவிப்பவர்கள். அதற்குமேல் ஜனலோகமாம். அதில் பிரம்மபுரோஹிதர்கள், ப்ரம்மகாயிகர்கள், ப்ரம்ம மஹாகாயிகர்கள், அமரர்கள், ஆகிய நான்குவிதமான தேவஜாதிகளிருக்கிறார்கள். அவர்களுங்கு மாஹபூதங்களும், இந்திரியங்களும் ஸ்வாதீனமாயிருக்கின்றனவாம். முன்லோகத்திலிருப்பவர்களைக்காட்டிலும் இரண்டுபங்கு ஆயுஸ்ஸுள்ளவர்கள், அதற்குமேல் தபோலோகமாம். அதில் ஆபாஸ்வரர்கள், மஹாபாஸ்வரர்கள், ஸத்யமஹாபாஸ்வரர்கள், ஆகிய மூன்றுவித தேவஜாதிகள் வஸிக்கிறார்கள். அவர்களுக்கு மஹாபூதங்களும், இந்திரியங்களும், மூலப்பிரகிருதியும், வசப்பட்டிருக்குமாம். எல்லோரும்தியானாஹாரர்கள், இரண்டுபங்கு ஆயுஸ்ஸுள்ளவர்கள். ஞான சக்தி குறையாதவர்கள். தங்குதடங்கலற்ற ஞானமுள்ளவர்கள். அவீசியென்ற நரகம்முதல் தபோலோகம் வரையிள்ள விஷயங்களையெல்லாம் தெரிந்துகொண்டவர்கள். இவ்விதம் பூமிமுதல் தபோலோகம் வரையுள்ள ஆறு லோகங்களில் புண்ணியாத்துமாக்களான தேவர்களும் மனுஷ்யர்களும் வஸிக்கிறார்கள். அந்தலோகங்களில்சென்று அந்த ஐசுவர்யங்களை அனுபவிக்கக் காரணமாயுள்ளது கர்மயோகமேயன்றி வேறில்லை. கர்மபூமியிலுள்ளவர்கள் அந்த வர்ணாச்ரம தர்மங்களைச் செய்துவருகிறார்களா? என்பதை அந்ததேவர்கள் கவனிக்கும்படி பரமேசுவரன் ஆக்ஞை செய்திருக்கிறார். மனிதர்கள் அப்படி நடத்தாவிடில் தேவர்கள் விடப்போவதில்லை. ஆகையால் தர்மத்தை எல்லோரும் ஆதரிப்பார்களாக. சுபம்

பத்திராதிபர்.

## விச்வகீதார்த்தோபஸம்ஹாரம்.

## ஸ்ரீ பகவத்கீதையின் 18-வது அத்யாயஸங்கிரஹம்.

(570-வதுபக்கத்தொடர்ச்சி)

இவ்விடத்தில் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது அதாவது:-

இவ்விரு சுலோகங்களும், த்வைதிகளுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் பொருத்தமுடையதாகாது. அத்வைதிகளுக்குத்தான் பொருந்தும். அத்வைதிகளைத் தவிர மற்றவரெல்லோரும் ஆத்மாவை உண்மையில் எக்காலத்திலும் கர்த்தாவாயும் போக்தாவாயும் இருப்பதாகவே கருதுகிறார்கள். அவர்களுக்கு இந்த சுலோகார்த்தம் ஸங்கதமாகாது. ருஜுவாக இந்த சுலோகத்தால் அத்வைதந்தான் புலப்படுகின்றது. த்வைதிகள் விசிஷ்டாத்வைதிகளிவர்கள் மதத்தில் ருஜுவாக இவைகளுக்கு அர்த்தங்கள் கூறமுடியாது. த்வைதிகளும், விசிஷ்டாத்வைதிகளும் இவ்விரு சுலோகங்களுக்கும் அர்த்தம் சொல்லும் விதமாவது —

य आत्मानि तिष्ठन्नात्मनः ।

अन्तः प्रविष्टश्शास्ता जनानां ।

என்ற சுருதிகளால் ஜீவர்களுக்கு கர்த்ருத்வம் பரமேசுவராதீனமென்று ஸித்தமானபடியால், எவனொருவன் ஜீவனுக்கே முக்ய கர்த்திருத்வமுண்டு, அது பரமேசுவராதீனமில்லை. பரமேசுவரனுக்குக் கருத்ருத்வமுமில்லை என்று நினைக்கின்றானோ? அவன் அக்ஞானியேயாவான் என்று அவர்களுடைய அர்த்தமாகும், இவ்விதம் அர்த்தங்கூறுவது அஸங்கதம், ஏனென்றால் ஆத்மாவிற்கு சரீராதி ஸம்பந்தத்தால்தான் கர்த்ருத்வம், உண்மையில் கர்த்ருத்வம் இல்லையென்ற விஷயமயல்லவா முன் சுலோகங்களால் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த அர்த்தமும் ஆத்மாவிற்கு புண்யபாபஸம்பந்தம் அதன் பலானுபவமுமில்லை என்று சொல்வதற்காகத்தான். ஆகவே ஆத்மாவிற்கு கர்த்ருத்வாதிகள் ஸ்வபாவத்திலில்லை. அதன் மூலமாக புண்யபாவங்களைச் செய்வதுமில்லை. அதன்பலன்களை அனுபவிப்பதுமில்லை என்றவிஷயத்தையல்லவா இந்த சுலோகங்களும் சொல்லவேண்டும். இதன்றி

ஆத்மாவிற்குப் பரமேசுவராதீனம் கர்த்ருத்வம் என்ற விஷயம் எப்படி இவ்விடத்தில் சொல்லமுடியும். அது பிரகிருதமில்லையே, ஆத்மாவிற்கு அகர்த்ருத்வம் அல்லவா பிருகிருதத்தில் சொல்ல வேண்டும். ஜீவர்களுக்கு கர்த்ருத்வம் வாஸ்தவமில்லையென்று சுருதிஸ்மிருதி ஸித்தமாயிருப்பதுபோல் பரமேசுவரனுக்கும் கர்த்ருத்வாதிகள் உண்மையிலில்லையே, ஜீவனுக்கோ, ஈச்வரனுக்கோ இவ்விருவருக்கும் அகர்த்ருத்வந்தான் ஸ்வபாவ நிலையாகும். கர்த்ருத்வம் கல்பிதமேதானன்றோ. இவ்விஷயத்தில்தான் சுருதிகளுக்கும் தாத்பரியமேயன்றி கர்த்ருத்வம் இருவர்களுக்கும் வாஸ்தவமென்பதிலல்லவே? ஆத்மாவினுண்மை அகர்த்ருத்வ நிலையை அறிவிப்பதற்கானவிடத்தில் கர்த்ருத்வத்தைப் பிரதிபாதிப்பதாகச் சொல்வது ஸங்கதமாகாதன்றோ? இவ்விதம் விருத்தார்த்தவாதிகளாகிய த்வைதி விசிஷ்டாத்வைதிகளை மனதில் வைத்துக்கொண்டுதான் கீதையில் नसपश्यतिदुर्मतिः என்று பகவான் நிந்தைபுரிந்துள்ளார். தவிர மத்வர் ஸ்ரீராமனுஜர் முதலியவர்களின் விபரீதார்த்தப் பிராந்தியைத்தான் ஸர்வக்ஞராயும் மாத்வராமானுஜாதிகளுக்கு முன்பு அவதரித்தவர்களாயுமுள்ள ஸ்ரீமத்பகவத்பாதாள் அனுவதித்து கண்டனம் பண்ணியிருக்கிறார்கள்.

ஆகையால் இந்த சுலோகத்தில் இவர்களுடைய அர்த்தம் அஸங்கதமேயாகும்.

இதுகாறும் முந்தின அத்தியாயங்களில் உபதேசிக்கப்பட்ட நிஷ்காம கர்மயோகத்தின் ஸ்வரூபத்தையும் அதன் பலனாகிய ஆத்மஞான நிஷ்டையையும் ஆத்மதத்வ ஞானிகளுக்கு புண்ய பாபஸம்பந்தம். அதன் பலஸம்பந்தமிவையில்லை என்ற விஷயத்தையும் அக்ஞானிகளுக்குத்தான் கர்மாக்களிலதிகாரம் என்னுமர்த்தத்தையும் பகவான் உபஸம்ஹரித்தார் என்பது கவனிக்கத் தக்கது.

இவ்விதம் கூறிவிட்டு ஆத்மதத்வ ஞானிகளுக்கு கர்மபல ஸம்பந்தம் கிடையாதென்றும் விஷயத்தையே பகவான் மறுபடியும்

ज्ञानं ज्ञेयं परिज्ञाता ।

என்பதாதி சுலோகங்களால் வர்ணிக்கின்றார். அதாவது—கர்மா காரகம், பலம் இவையெல்லாம் முக்குணவடிவமாகிய மூலப்பிர கிருதியின் விகாரங்களாகும். குணாதீதமான ஆத்மாவிடம் இவை ஸம்பவிக்கா. இந்தக் கிரியாகாரகாதிகளுக்கு ஆத்மாவினிடம் ஸம்பந்தத்திற்கு இடமில்லை என்பதை நிர்ணயிப்பதற்காகத்தான் ஸாத்விகராஜஸதாமஸ பேதத்தால் மூன்றுவிதமாகப் பகவான் அவைகளை விபாகம் பண்ணியிருக்கிறார். ஸாத்விகங்களை கிரு ஹித்துக் கொள்வதற்காகவும் ஞானம், கர்மா, கர்த்தா, புத்தி தைரியம், ஸுகம் இவைகளைக் கிரமமாக மூன்று விதமாக நிரூப ணம் செய்திருக்கிறார்.

இவற்றில் ஞானம் ஸாத்விகமென்றும், ராஜஸமென்றும், தாமஸமென்றும் மூன்றுவிதம்—ஸாத்விக ஞான ஸ்வரூபம்

सर्वभूतेषु येनैकं भावमव्ययमीक्षते ।
अविभक्तं विभक्तेषु तत् ज्ञानं विद्धि सात्विकम् ॥

என்ற சுலோகத்தால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தசுலோ கத்தின் அர்த்தமாவது:—

“நாமரூபாதிகளால் பரஸ்பரபின்னங்களாய்க் காணப்படும் பிரும்மாதி ஸ்தாவராந்த வஸ்துக்களை நிர்விகாரமாயும், கூடஸ்த நித்யமாயுமுள்ள ஆத்மவஸ்துவாக எந்தஞானத்தால்ஸாக்ஷாத்கரிக் கின்றானோ, அது தான் ஸாத்விகஞானமாகும்” என்று இந்த சுலோகம் அத்வைதவாதிகளின் அத்வைதாத்ம ஞானத் தையே ஸ்பஷ்டமாய் தெரிவிக்கின்றது. த்வைதிகளின் த்வை தாத்ம ஞானமோவென்றால் ராஜஸமும் தாமஸமும்தானாகையால் அவர்களின் ஞானம் மோக்ஷஸாதனமில்லை என்னுமபிப்பிராயம் வியக்தமாய் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவிற்குத் தெரியவருகிறது. சுருதிகளிலும்

उदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति ।
मृत्योस्स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ।
“अथ योऽन्यां देवतामुपास्ते अन्योऽसौ अन्योहमस्मीति न स वेद यथा पशुः”

என்னும் வசனங்களால் அத்வைதாத்ம ஞானந்தான் மோக்ஷ காரணமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கீதையிலும் பகவான்

वासुदेवस्सर्वमिति स महात्मा सुदुर्लभः।

இந்த ஞானத்தையே உபதேசித்திருக்கிறார். இந்த சுலோகத்திற்கு ஸ்ரீ பகவத்பாதாளுடைய அர்த்தந்தான் ஸரியானது' த்வைதி விசிஷ்டாத்வைதிகளுடைய அர்த்தம் ஸரியானதல்ல.

அவர்களுடைய அர்த்தமாவது:—

பூதேஷு என்றபதம் வருணாச்ரம தர்மாதிகாரிகளைத் தெரிவிக்கின்றது. ஏகம் என்றபதமும் ஜாத்யேக வசனம் ஆத்மா அனேகமென்பதுதான் சுருதிஸ்மிருதி ஸித்தமாகும். ஏகாத்மவாதம் சுருதிஸ்மிருதி ஸம்மதமில்லை. ஆகவே அத்வைதாத்ம தரிசனம் இந்த சுலோகத்தில் சொல்லப்படவில்லை. கர்மாதிகாரிகளாகிய பிராம்மணாதிகளிடத்தில் பரமாத்மா அந்தர்யாமியாக இருப்பதாக பாவிக்கவேண்டுமென்ற அர்த்தந்தான் இந்த சுலோகத்தால் பிரதிபாதிக்கப்படுகிறது.

கர்மகாரணங்களைப்பற்றி பேசுமிடத்தில் கர்மாவை அனுஷ்டிக்கும் தருணத்திலுள்ள ஞானத்தைத்தான் மூன்றாக விபாகஞ் செய்யவேண்டுமேயொழிய அத்வைதாத்ம ஞானத்தையல்ல. அப்படி விபாகஞ்செய்வதும் கர்மாதிகாரிகள் குணாதீனர்கள் என்னும் விஷயத்தை அறிவிப்பதற்காகத்தான். ஆதலால் அத்வைதாத்ம ஞானமிங்கு விவக்ஷிதமில்லை. என்று

இது ஸரியல்ல—ஏனென்றால்

த்வைதிகளின் அபிப்பிராயப்படி அர்த்தம் கூறும்பக்ஷத்தில் सर्वभूतेषु पृथक्त्वेन यत्तु कृत्स्नवत् என்ற சுலோகங்கள் ஞானத்தை விபாகம் செய்யவில்லையென்று சொல்லும்படி நேரிடும். கர்ம ஸாத்குண்யத்தின் பொருட்டு ஸம்பாதித்துக்கொள்ளவேண்டிய உபாஸனத்தையல்லவா மூன்றாகப் பிரித்திருப்பதாக இவர்களுடைய அபிப்பிராயம்.

இவ்வித உபாஸனையை இங்குமூன்றாகப்பிரித்து சொல்வதும் அவசியமில்லை, மேலே கர்த்தா,கர்மா இவைகளை மூன்றாகவகுத்

திருப்பதாலேயே இந்த அர்த்தமுமடங்கிவிட்டது. அந்த அர்த்தத் தையே இந்த சுலோகத்திலும் சொல்வது பிஷ்டபேஷணமாகும். மேலும் முந்தின சுலோகங்களில் கர்மயோகத்தைமட்டிலும்பகவா னுபதேசித்தாரில்லை அத்வைதாத்மஞானிகளையும்முந்திப்பிரஸங்கித் திருக்கிறார். ஆதலால் கர்மப்பிரகாணமென்று சொல்வதற்கும் முடியவில்லை. கர்மாஞான மீண்டுந்தானிவ்வத்தியா யாரம்பத்தில் காணப்படுகின்றது. அவ்விதமானுலிரண்டு அர்த்தமும் ஸரி யென்பதற்குமில்லை. கர்மானுஷ்டான காலத்திலுள்ள ஞானத் தைப்பற்றி இந்த சுலோகமிருப்பதாக கூறுவதில் பூதேஷு என்ற பதத்திற்கு அர்த்தஸங்கோசமும், ஏகம் என்னும் பதத்தை ஜாதி வாசகமாக அங்கீகரிப்பதில்கிலேசமும், ஈக்ஷதே என்றவிடத் தில் கர்மாநுஷ்டான வேலயாம் என்ற பதார்த்தாத்யாஹாராதி தோஷமும், பாவம் என்றபதத்திற்கு "ஜீவர்கள்" என்ற அனு சிதார்த்த முரைப்பதும் ஆகிய அனேகதோஷம்ஸம்பவிக்கின்றது. இப்படியே ராஜஸ தாமஸ ஞான சுலோகங்களிலும் ஸம்பவிக் கிறது. ஆகையால் த்வைதிகளின் மதத்தில் இந்த சுலோகங்கள் ஒருபோதும் ஸங்கதமாகாதென் றுணரவேண்டும். இவ்வாறு பகவான் सन्यासस्यमहाबाहो என்று கௌண ஸன்யாஸஸ்வரூபத் தைப்பிரச்னம்செய்த அர்ஜுனனைக்குறித்து தியாகந்தான் ஸன் யாஸமென்று சொல்லிவிட்டு அதுவும் ஸாத்விக ராஜஸதாமஸம் என்று மூன்று விதமென்று விபாகஞ்செய்து கர்மபலத் தியாகந் தான் ஸாத்விக கௌணஸன்யாஸம். மௌட்யத்தாலும் சரீ க்லேசபயத்தாலும் கர்ம ஸ்வரூபத்தியாகமென்பதுராஜஸதாமஸ மாகுமென்றும் நிரூபித்துவிட்டு கர்ம காரணமாகிய கர்த்தா, ஞானம் புத்தி, தைரியம், இவற்றையும் பிராஸங்கிகமாக சொல்லி முடித்தவுடன்

ब्राह्मणक्षत्रियविशां ।

என்ற சுலோகங்களால், கர்மயோக ஸ்வரூபத்தையே, வேறுவித மாக, நிரூபித்து கௌண ஸன்யாஸத்தை ஸ்துதிசெய்ய ஆரம்பிக் கின்றார்.

தவிர பகவான் கர்மயோகம் பக்தியோகம் ஞானயோகம் முதலிய விஷயங்களை ஸம்க்ஷேபமாய் உபஸம்ஹாரம்செய்து கீதாசாஸ்திரத்தையும் முடிக்கின்றார்.

வைதிக வருணாசிரம தர்மத்தை—பிரயோஜனத்தை எதிர் பாராமல் கடமையென நினைத்துச் செய்து வரவேண்டும். அதனால் தத்வஞானாதிகாரம் ஸித்திக்கும். அதிலும் பிறருடைய தர்மத்தை யனுஷ்டிக்கலாகாது, அவரவர்களுக்கு வேதங்களால் விதிக்கப்பட்ட கர்மாக்களை அவரவர்கள் அனுஷ்டிப்பதுதான் உசிதம், தனது கடமையை யுக்தி விருத்தமென்றோ அல்லது கஷ்டமென்றோ, துஷ்டமென்றோ விடலாகாது, எப்படியிருந்தாலும் கடமையைச் செய்தே தீரவேண்டும், பரதர்மம் பயத்தை யளிக்கும். தன்தர்மம் அபயத்தைக் கொடுக்கும், பரதர்மத்திலும் தோஷம் முதலியவை இல்லாமலில்லை.

सर्वारंभाहि दोषेण धूमेनाग्निरिवावृताः ।

என்றல்லவா கீதாசாரியாளின் வசனம். ஆதலால் பிரயோஜனத்தைக் கருதாமல் கர்மாக்களை யவசியஞ் செய்யத்தான் வேண்டும். அப்படிச்செய்துவருவதால்முக்கிய வித்வத்ஸன்யாஸம் கிடைக்கும். இதுகிடைத்தால் கர்மாக்கள் நசித்துவிடும். பந்த நிவிருத்தியும் ஏற்படும். இதைத்தான் தத்வஞான நிஷ்டை, ஸாங்கிய நிஷ்டை என்றபதங்களறிவிக்கின்றன. இந்த நிஷ்டையில் முமுக்ஷுக்களுக்குப் பிரும்மபாவம் ஸித்திக்கின்றது. இதுதான் மோக்ஷம் இதை யடைவதற்குத்தான், கர்மா, பக்தி, யோகம், ஞானம் இவைமுதலிய ஸாதனங்களை வேதமுபதேசிக்கின்றது. மோக்ஷத்தை யடையும்பொருட்டு வைகுண்டம் முதலிய லோகங்களுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. இவ்விடத்திலேயே இதை யடைந்து ஜீவன் முக்தனாகவாழலாம். பிறகு விதேஹ முக்தியும் கிடைக்கும். இத்தகைய பிரும்மஞானத்தை யடைந்த ஜீவன் முக்தனும் தத்வ ஞானப்யாஸஞ் செய்துவரவேண்டும். இன்றேல் ஜீவன் முக்திஸுகங் கிட்டாது. பிரும்மத்தை அடிக்கடி அனுஸந்தானம் பண்ணுவதால்த்தான் ஞானநிஷ்டை திடப்படும். ஞானிகளுக்குக் கர்மாவிலதிகாரமில்லை. ஸன்யாஸத்தில் தான். கர்மாவும்-ஞானமும்-பரஸ்பர விருத்தமானது. இவ்விஷயத்தைத் தான்

भक्त्या मामभिजानाति यावान्यश्चास्मि तत्वतः ।
ततो मां तत्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥

என்ற சுலோகத்தால் பகவான் கூறியுள்ளார். இந்த சுலோகத்தில் ज्ञात्वा विशते என்பதினாலேயே, பிரும்மஞானமுதித்தவுடன் பிரும்மமாய் ஆகிறான் என்ற அர்த்தம் ஸித்திக்குமானாலும் तदनन्तरं என்ற பதப்பிரயோகத்தால் பிரும்மஞானத்திற்குப் பிறகு பிரும்மத்தை அடைவதற்காக வேறு ஸாதனங்கள் அவசியமில்லை என்ற அர்த்தம் விளங்குவதால் பிரும்மத்தை அடைவதற்காக வைகுண்டாதி லோகங்களுக்குச் செல்லவேண்டுவதில்லை என்ற விஷயம் கீதாசாரியாளுக்கு அபிமதமென்று தோன்றுகிறது. तदनन्तरं என்ற பதத்திற்கு வேறு அர்த்தஞ்சொல்வதுண்டு. अनन्तरं பேதமில்லாத तत् பிரும்மத்தை என்று.

எவ்விதத்திலுமிந்த சுலோகம் த்வைதி விசிஷ்டாத்வைதிகளுக்குப் பொருந்தாது. அத்வைதிகளுக்குத்தான் பொருந்தும்.

இந்த சுலோகத்திற்கு த்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் அர்த்தம் கூறுவதென்னவென்றால்—

मां तत्वतो ज्ञात्वा तदनन्तरम्, तत्वज्ञानानन्तरम्

ततो भक्तितः मां विशते प्रविशति प्राप्नोति ॥

என்று த்வைதிகளுடைய மதத்தில், அன்வயக்கிரமம் இதன்படி என்ன அர்த்தமென்றால்.

"ஸ்வரூபம், குணம், விபூதி இவைகளுடன் விளங்குமென்னை (பகவானை) அறிந்தவுடன் பகவானிடத்தில் பக்தி ஏற்படுகின்றது. அதனால் ஸித்திபெரும்பக்தியால் என்னை அடைகிறான். मद्भक्तिंलभतेपरां என்று முன் சுலோகங்களில் பிரும்மத்தையடைவதற்குப் பக்திதான் காரணமென்று சொல்லியிருப்பதால் இந்த சுலோகத்திலும் ततः என்னும் பதத்திற்குப்பக்தி என்றுதான் அர்த்தம் கூறவேண்டும். भक्त्या त्वनन्यया शक्यः என்றசுலோகத்திலும் பிரும்மப் பிராப்தி என்னும் மோக்ஷத்திற்கு பக்திதான் காரணமென ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டுளது. ஆகையால் அத்வைதிகளின் அர்த்தம் ஸரியல்லவென்று;

இது ஸரியல்ல--

இந்த சுலோகம் ஞானத்தைப் பிரதிபாதிக்கிறதேயன்றி பக்தியையல்ல. அப்படி அங்கீகரிக்கும் பக்ஷத்தில் பூர்வார்த்தம்

ஸங்கதமாகமாட்டாது. பூர்வார்த்தத்தில் பக்தியை ஞானஸாதன மாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

भक्त्या मामभिजानाति ।

என்றல்லவா பூர்வார்த்தம். பூர்வார்த்தத்தில் ஸாதனபக்தியும் உத்தரார்த்தத்தில் ஸாத்யபக்தியும் என்று சொல்லமுடியவில்லை. ततः என்ற பதத்தால் "ஸாத்யபக்தி"யை அர்த்தமாகக்கூறுவ தற்குப் பிரமாணமில்லை, मद्भक्तिंलभतेपरां என்றவிடத்தில் சொல் லப்பட்ட ஸாதன பக்தியைத்தான் ततः என்ற பதத்திற்கு அர்த்த மாகப்பிரகரணத்தால் த்வைதிகள் தீர்மானிக்கவேண்டும். அதுவும் ஸரிப்படவில்லை. பூர்வார்த்தத்தில் ஞான ஸாதனமாகவுள்ள பக்தி உத்தரார்த்தத்தில் எப்படி ஞானத்திற்குப்பிறகு உண்டாவதாக வர்ணிப்பது? ஞானஸாதனம் ஞானஸாத்யமாகுமா? ஆகையால் த்வைதிகளினர்த்தம் வெகு அஸங்கதம்.

தவிர பக்தி, உபாஸனம் இவையெல்லாம் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் காரணமன்று. ஞானமொன்றுதான் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்காரணம். மற்றவையெல்லாம் மோக்ஷத்திற்குப் பரம் பரா காரணமேயாகும். இவ்விஷயத்திற்கு அனேக பிரமாணங்க ளுண்டு. இவ்வித அபிப்பிராயத்தை சுருதிஸ்மிருதியுக்திப் பிர மாணவாயிலாக ஸ்ரீ பகவத்பாதாள் முதலிய மஹான்களும் ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். இந்த பகவத்கீதையிலும் ஞானந்தான் மோக்ஷகாரணம் கர்மோபாஸனாதிகளல்லவென்றும் இவ்விஷயத்தை

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् ।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥
मद्भक्तएतद्विज्ञाय मद्भावायोपपद्यते ।

என்று பகவான் ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார். ஆதலால் பக்தி முக்திக்கு ஸாக்ஷாத் காரணமாகாது. भक्त्यात्वनन्यया शक्यः என்று கீதாவாக்யத்திற்கும் ददामिबुद्धियोगन्तं என்றுமுன் அத்தியாயங்களிலுள்ள வசனத்துடன் விரோதமில்லாமல் "ஞானவாயிலாக பக்தி முக்தி காரணம் என்பதாக சொல்ல வேண்டும்.

இல்லாவிட்டால் भक्त्यात्वनन्यया என்ற இந்த சுலோகத்தினுத்தார்த்தமும் த்வைதிகளுக்குப் பொருந்தாது. இந்த சுலோகத்தினுத்தார்த்தத்திலும்,

ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ।

முக்திக்கு ஸாக்ஷாத்காரந்தான் காரணமென்று சொல்லப் படவில்லையா? ஆகையால் பகவத் கீதைக்கும் சுருதிஸ்மிருதிகளுக்கும் ஞானத்தில்தான் தாத்பரியம். பக்தியில் முக்கிய தாத்பரியமில்லை. இதன் விரிவை வேறிடத்தில் காண்க.

ஆகையால் அத்வைதிகளுடைய மதத்தில்தான் கீதா தாத்பரியம் ஸங்கதமாகும். ஸர்வ கீதார்த்த ஸாரத்தையும்,

सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

என்ற இந்த ஒருசுலோகத்தால் பகவான் ஸங்கிரஹமாய் உபதேசித்துவிட்டார்.

இதனர்த்தமாவது—

“அர்ஜுன ? புண்ய பாபவடிவமாயுள்ள ஸகலகர்மாக்களை சாஸ்திரீயமாக பரித்யாகஞ்செய்து அத்விதீயனான என்னையே சரணமடைவாயானால் சோகமோஹம் விலகிபேரின்ப வீடுசேர்வாய்” என்று.

இந்த சுலோகந்தான் கீதையின் முடிவு இதற்கு பகவத்பாதாள் கீழ்க்கண்டபடி ஸன்யாஸத்தால் ஆத்மஞானம் அடையத்தக்கதென்றும் இதில்த்தான் கீதைக்குத் தாத்பர்யமென்றும், அர்த்தஞ் சொல்லியிருக்கிறார்கள். மதுஸூதன ஸரஸ்வதீஸ்வாமிகளிவ்வர்த்தத்தை தூஷித்துவிட்டு கீதைக்குப் பக்தியில்தான் த்தாத்பரியம் என்றும், பக்தியைத்தானிந்த சுலோகமும் சொல்கின்றதென்றும் தம்முடைய கீதாடீகையில் சொல்லியிருக்கிறார்கள்.

அவர்களுடைய அபிப்பிராயம் ஸரியல்ல. கீதைக்கு பக்தியில் முக்ய தாத்பரியம் சொல்வதுபிசகு. பக்தியானது முக்திக்குப் பரம்பரா காரணமேயன்றி ஸாக்ஷாத்காரணமில்லை. ஞானந்தான்

ஸாக்ஷாத்காரணம் இவ்விஷயம் முன்பு ஸங்க்ரஹமாய்த்தெரிவித்தாய்விட்டது. இப்படியிருக்க பக்தியில் கீதையை எப்படி உபஸம்ஹாரஞ் செய்யமுடியும். மன்மனாபவ என்ற முந்தின சுலோகத்தால் பக்தியைப்பற்றியும் உபஸம்ஹாரம் செய்தாய் விட்டதே. மறுபடியும் அதையே இந்த சுலோகத்திலும் பிரதிபாதிப்பது உசிதமில்லையல்லவா?

(தொடரும்)

வீ. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

---

# கங்காவதரண தத்துவம்.

ஸ்ரீமானான நீலகண்ட தீக்ஷிதரவர்கள் கங்காவதரணம் என்ற காவ்யத்தின் வாயிலாக சந்திர சூடாமணியான சிவபெருமானின் மஹிமையையும், அவரிடம் வழிபடுகின்ற பக்தசிகாமணிகளுக்கும் பெருகும் அளவிலா ஆநந்தத்தையும் நன்கு விளக்கி இருக்கிறார்கள்.

அம்மஹாகவி மங்கள ச்லோகந்தொடங்கும்போதே ஒப்புயர்வற்ற சிவபக்தியை கவிமணிகளின் மனதில் பதியும்படி அறிவிக்கிறார்.

अद्भुतं किमपि द्वन्द्वमस्तु तन्मम शर्मणे ।
स्वस्तिकस्तनुते यस्य सुदृढाश्लेषनिर्वृतिम् ॥

ஆச்சர்யமானதும் வர்ணிக்க இயலாததுமான ஒரு தம்பதி, எனக்கு க்ஷேமத்தை அளிக்கட்டும். ஸ்வஸ்திகம் என்ற ஓர் ஆஸன விசேஷமானது எந்த தம்பதிக்கு காடாலிங்கனத்தாலாகிய ஆநந்தத்தைப் பெருக்குகிறதோ?

அதாவது:—அர்த்தநாரீச்வரர், பாதி உடல் பெண்ணும் பாதி உடல் ஆணும்சேர்ந்து ஒரே சரீரியாயிருப்பதால் வலது பாகத்தை இடது பார்ச்வத்தில் போடுகிறார். அப்போது காடா

லிங்கன சுகத்தை அடைகிறார்கள். உலகத்திலோ மானவாநு லும், வானவாநுலும் சரீராந்தர சம்பந்தத்தாலேயே அவ்வாநந் தத்தை அடைகின்றனர். அர்த்தநாரீச்வரரோ லோகவிலக்ஷண மான ஒரே சரீரியாயிருப்பதால் அவருக்கு ஆயாஸமின்றியே அவ்வாநந்தம் ஏற்படுகின்றது— என்று பொருட்சுவையால் அர்த் தநாரீச்வரரிடம் தனது பக்தியை வெளிப்படுத்துகிறார்.

பின்பு வால்மீகி, வியாஸர், காளிதாஸர், தனது தந்தை நாராயணத்வரி, ஸாஹித்யத்தின்மேன்மை, துஷ்கவி நிந்தை இவ்விஷயங்களை 2-முதல் 37-வரையுள்ள ச்லோகங்களால் வெகு சமத்காரமாய் உல்லேகித்து, 38-முதல் 50-வரை ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதாளின் அபாரமான சாஸ்த்ர நிர்மாணசக்தி விசே ஷம், அவர்களுக்கு ஸ்ரீகண்டரிடம் இன்றியமையாத பக்திவள் ளல் இவைகளைப் புகழ்ந்து அம்மஹானின் கனிஷ்டரான ஆச் சான் தீக்ஷிதாளின் புத்திரரான நாராயணத்வரியின் புத்திரர் கள் ஐவரில் தன்னை இரண்டாவது குமாரனாகவும் பூமிதேவியிடம் ஜனித்தவர் என்றும் தனது வாலாற்றையும் விளக்கியுள்ளார்.

பிறகு தமது வித்தியா குருக்களான வெங்கடேச தீக்ஷி தாளை மூன்று ச்லோகங்களால் துதித்து கங்காவதரணக் க்ரந்தத் தைத் தொடங்குகிறார்.

பாவனமான காவேரி நதிக்கரையில் வாஸமும் வேதாந்த விசாரமும் வெகுவாய் தனக்கேற்பட்டிருப்பினும், ஏதோ ஒரு அரிய புண்யகன்மப்பயனால் நீராடுவதற்கு கங்கையை நாடினேன் என்று மறுபடியும் கூறி, "கங்காதேவியோ தவத்தாலேயேயடை யத்தக்கவள்; தவஞ்செய்யவோ என்னால் சாத்தியமில்லை; ஆத லால் காவ்விய சந்தர்ப்ப ரூபமான அமரவாணியால் தவஞ்செய் கிறேன், கங்காதேவியை ஸ்மரிக்கின்ற மூகனும் துதிக்கத் தலைப் படுகிறான் என்றால், கவியென்ற பெயர்வாய்ந்த என்னால்எங்ஙனம் மௌனமாயிருக்கத்தகும்" என்று மூன்று செய்யுட்களால் (56-முடிய) க்ரந்தாவதரணத்தை வெளியிட்டுத் தொடங்குகிறார்.

அஃதில் பிரகிருதத்தில் அந்நூலில் ஆங்காங்கு ததும்பும் பகவத் தத்துவத்தைமட்டும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ச்லோகங் களைக்குறிப்பிட்டு பொருட்சுவையை வெளியிட முன்வருகிறேன்.

भगीरथमुखाद्वाचः स्तुवन्ति मम जाह्नवीम् ।
प्रभात्रे चन्द्रचूडस्य पर्यवस्यन्ति तत्वत: ॥५८॥
चन्द्रशेखरसव्याङ्घ्रचरणोन्मार्जनाम्भसाम् ।
विवर्ता जगदुत्सङ्गे विहरन्ति मदुक्तय: ॥५७॥
भक्त्या कृतेति जाह्नव्याः प्रभावं वदतीति वा ।
सन्तो ममानुगृह्णन्तु निर्गुणामपि मद्गिरम् ॥५९॥
आसीद्भगीरथो नाम राजा रविरिवापरः ।
येन साक्षात्कृतः शंभुः येन गङ्गाऽवतारिता ॥६०॥

பகீரத சக்கிரவர்த்தியின் முகமாக எனது வாக்குகள் ஜஹ்னு குமாரியைத் துதிக்கின்றனவாயினும் அவைகளின் தத்துவத்தை நோக்குமிடத்து, சந்திர சூடாமணியின் மஹிமையிலேயே முடிவு பெறுகின்றன. சந்திரசேகரனின் வாம பாதத்தைக் கழுவுகின்ற தீர்த்தங்களின் விவர்த்தங்கள்போன்ற எனதுமொழிகள் ஜகத்தின்மத்தியில் உலாவுகின்றன, அஃதாவது பராசக்தியான அம்பாளின் அனுக்கிரஹம் தனக்கு மேற்பட்டிருப்பதால், வாக்குக்கு அதிபதியான அம்பாளின் கருணையால்.எனது வாக்குகள் ரஸந்ததும்பி ரஸிகர்களின் ஹிருதயகமலத்தில் பாய்ந்து, போரநந்தத்தைப் பயக்குகின்றன என்று இதனால் வெளியாகிறது.

இவர் சிவ பக்தராயினும் ஆங்காங்கு லோக நாயகியான அம்பாளின் மேலீட்டையே கூறுகிறார். தான்திருமலை நாயகரின் மந்திரியாயிருந்த சந்தர்ப்பத்தில் அரசனின் தப்பெண்ணத்தால் கண்ணுக்குத்தானாகவே விளைவித்துக் கொண்ட ஊனத்தை ஆநந்தஸாகரஸ்தவத்தால் அம்பாளைத் துதித்து, மறுபடி அவ்வூனத்தைப் போக்கிக்கொண்டார் என்பதும் உலகமறிந்ததே.

இக்கவிமணி, பக்தியால் அறிவிக்கிறனென்றே? அல்லது கங்கைதேவியைத் துதிக்கிறனென்றே?எண்ணி குணங்ளற்றவையாயினும் என்மொழிகளை நல்லோர் ஏற்றுக்கொள்ளவேண்டும், என்று வணக்கத்துடன் தொடங்குகிறார்.

சிவபெருமானை ஸாக்ஷாத்கரித்து, கங்கையை விண்ணுலகிலிருந்து மண்ணுலகில் சேர்த்தவனும், மற்றொரு சூரியன்போன்ற

வனுமான பகீரதன் என்ற ஓர்வேந்தனிருந்தான் என்றுதொடங்கி 61 முதல் 86 முடிய 1 ஸர்க்கத்தால் ராஜ்ஜியபார ஸாமர்த்தியத்தியம் வர்ணிக்கப்பட்டது.

साम्राज्यं यदि सप्तमार्णवतटी विश्राम्यदाज्ञाक्षरं
सौन्दर्यं यदि मुद्रिताः स्मरगिरः सा चेन्मतिः को गुरुः ।
शौर्यं चेत्पुनरन्यदेव तदिति स्तोत्रं विचित्रं सतां
शृण्वन्नेव भगीरथक्षितिपतिर्निन्ये सहस्रं समाः ॥८६॥

அவ்வரசனின் ஸாம்ராஜ்யத்தை வர்ணிப்போமானால், அவ்வரசனது சாஸனம் ஏழுகடல்களைத்தாண்டி விச்ராந்தியடைகிறது. ஸௌந்தர்யத்தைக் கூறுவோமென்றால் மன்மதனைப் பற்றின வார்த்தைகளே முத்திரை யிடப்படுகின்றன.

சௌர்யத்தைப் பற்றியோவென்றால், அதுவேறு விசித்ரமாமாயுள்ளது என்று' ஸத்துக்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டே பகீரதச்சக்கிரவர்த்தி வெகுவருடங்களைப்போக்கினான்.

1-வது ஸர்க்கத்தின் தத்துவம் முற்றிற்று

K-V- சுப்பிரமணிய சாஸ்திரி

---

## யாஜுஷோபாகர்மத்தில் மற்றோர் சங்கை.

யாஜுஷோபாகர்மத்திற்கு தோஷத்தைக் கூறுமிடத்து "மலமாஸே நிபதிதே" என்பதாதி வசனங்களில் குரு, சுக்கிரன் இவ்விருவர்களின் மௌட்டியம் எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் ஆஷாடயில் சுக்கிரனுக்கு மௌட்டியமில்லாவிடினும் குரு மௌட்டியமிருப்பதால் ஆஷாடயுந் துஷ்டந்தானே. அதில் எப்படி உபாகர்மத்தைச்செய்யலாம். அன்றியும் மயாதி மதப்படி குரு சுக்கிரர்கள் பரஸ்பரம் மித்திரர்களானபடியால் சுக்கிரனுக்கு மித்திரனாகிய குருவுக்கு மௌட்டியமிருப்பதால் எப்படிச் செய்யலாம், இந்த சங்கைக்கு ஸமாதானத்தை ஆர்யதர்மம் மூலமாகவே வெளியிடவேண்டுகிறேன்.

சங்கரன்.

# உபாகர்மவிஷயம்.

இவ்வருஷத்தில் ஆவணி புரட்டாசி மாஸங்களில் சுக்கிர மௌட்டியம் ஸம்பவிப்பதால் ஆடிமீ பௌர்ணமியிலேயே உபாகர்மம் செய்யவேண்டுமென்று பஞ்சாங்கங்களில் எழுதியிருப்பதுடன் பத்திரிகைகளிலும் பிரசுரமாயிருக்கிறது.

ஆயினும் வைத்யநாத தீக்ஷிதீயத்தில் வஸிஷ்ட வசனத்தால் கிரஹண ஸங்கரமணாதி தோஷங்கள் போலவே, குரு சுக்கிர மௌட்டிய தோஷங்களும் ஸர்வஸாதாரணமென்று தெரியவருகிறபடியாலும்—

பின்னும் यत्तु என்று தொடங்கி—

यज्ञोपवीतं कर्तव्यं श्रावणे गुरुशुक्रयोः ।
बाल्ये मौढ्येऽपि वार्धक्ये कर्तव्यं नित्यकर्मवत् ॥

इत्यादि तच्छाखाधीशस्य प्राबल्ये सति वेदितव्यम् । என்றும்,

शुक्रे शक्तियुक्ते गुरुमौढ्येपि यजुश्शाखिनामुपाकर्मकर्तव्यम् ।

என்று தீக்ஷிதரவர்களுடைய அபிப்பிராயப்படி

எந்தசாகாதீச சுக்கிரனுடைய ப்ராபல்யத்தினுல் குருவினுடைய பால்ய மௌட்டிய வார்த்தக்யங்களிலும்செய்யலாமென்று அர்த்தமாகிறதோ அந்தச்சாகாதீசனுன சுக்கிரனே வார்த்திக்கியமுள்ளவனுக இருக்கிறபடியால் திருக்கணித பஞ்சாங்கம் முதலான அனேக பஞ்சாங்கப்படி ஆடி-மீ 27-உ 28-உகளில், தெலுங்கு பஞ்சாங்கப்படி 18, 20உகளில் சுக்கிரன் அஸ்தமனமாகிறபடியால் அஸ்தமன தினத்துக்குமுன் 15-நாள் வார்த்தக்ய தோஷம் கெவனிக்கவேண்டியதாகையால் வேறு நிபந்தனங்களிலும் பால்ய வார்த்தக்யங்களில் செய்யக்கூடாதென்று நிஷேதமிருப்பதால் ஆடிமீ சுக்கிரவார்த்தக்யம் குருமௌட்யம் ஆவணி புரட்டாசிகளில் சுக்கிரமௌட்யம். இப்படி காலத்ரயத்திலும் தோஷங்களிருப்பதால் முக்யகாலமான ஆவணிமாதத்திலேயே செய்வது உசிதமென்று அபியுக்தர்கள் தீர்மானிக்கிறுர்கள்.

சங்கர வாத்தியார்.
சோழவந்தான்.

குறிப்பு:—சுக்கிரனுக்கு வார்த்தக்ஷிய தோஷமில்லை, [ப-ர்]

## இதற்கு ஸமாதானம்.

சுக்கிரனுக்கு சக்தியிருக்கும்பொழுது குரு மௌட்டியத்தை அடைந்திருந்தாலும் உபாகர்மத்தைச் செய்யவேண்டும். வைத்தியநாததீக்ஷிதீயம் உபாகர்மப் பிரகரணத்தில்—

एको मूढो भवेदन्यः स्वोच्चमित्रांशगो यदि ।
स्वराशिमूढगौ चैव मौढ्यदोषो न विद्यते ॥

इत्यादिवचनदर्शनाच्छुक्रे शक्तियुक्ते गुरुमौढ्येपि यजुश्शाखिनामुपाकर्मकर्तव्यम् । शुक्रमौढ्यदावप्येवम् ।

"குரு சுக்கிரன் இவர்களுள் ஒருவன் மூடனுயிருப்பினும் மற்றொருவன் சக்தியுள்ளவனுயின் மௌட்டிய தோஷமில்லை. தன் ராசியில் மௌட்டியத்தை அடைந்திருந்தாலும் மௌட்டிய தோஷமில்லை" என்பதாதி வசனமிருப்பதால் சுக்கிரன் சக்தியுள்ளவனுயிருக்கும்பொழுது குரு மௌட்டியமிருந்தாலும்யஜுர் வேதிகள் உபாகர்மத்தைச் செய்யவேண்டும். சுக்கிர மௌட்டியத்திலும் குருவுக்கு சக்தியிருந்தால் ரிக்வேதிகள் உபாகர்மத்தைச் செய்யலாம் என்றிருப்பதால் இந்த சங்கைக்கே இடமில்லை. மயாதி மதப்படி குரு சுக்கிரர்கள் பரஸ்பர மித்திரர்களேயன்றி ஸித்தாந்தப்படி பரஸ்பரம் சத்ருருக்களே; அதனுற்றுன் வராஹமிஹிராசாரியார் பிருஹஜ்ஜாதகத்தில் மயாதிமதத்தை—केषांचिदेवं मत् என்று சிலரது பக்ஷமென்றுரேதவிர ஸித்தாந்தபக்ஷமாகச் சொல்லவில்லை. ஸித்தாந்தபக்ஷமோவெனில் ஸத்தியாசாரியார் சொன்னதாம். सत्योपदेशो वरं என்று ஸத்தியாசாரியார் பக்ஷத்தைச் சிறந்ததாகக் கூறுகின்றார். இதன் விரிவை எமது ஜோதிஷ சந்திரிகையில் காண்க. அன்றியும் குரு உச்சத்திலிருப்பதால் மௌட்டியதோஷமே கிடையாதென்று முன் ஸஞ்சிகையில் வெளியிட்டோம். ஆகையால் இவ்வருஷத்தில் ஆஷாடீயில் யாஜுஷர்கள் எல்லா உபாகர்மங்களையும்செய்யவேண்டுமென்பதே ஸித்தாந்தம்.

---

## காயத்ரீ ஜபத்தில் ஓர் சங்கை,

கல்லிடைக்குறிச்சி L. வெங்கிடசுப்பாமணியன் எழுதுகிறார்:—

ச்ரௌதிகள் பஞ்சாங்கத்தில் காயத்ரீஜபம் ஆவணிமீ 13உ சனிக்கிழமையன்று போட்டிருக்கிறது.

संधिस्संगवतः पश्चादर्वागावर्तनाद्यदि ।
तत्रैवोपाकृतिं कुर्यात् सद्यश्च समिदाहुतिः ॥
सन्धिः सङ्गवतः प्राक्चेत् पूर्वस्मिन् पर्वणिक्रिय ।
श्वोभूते समिदाधानमेषः श्रावणिको विधिः ॥

என்றபடி 12-ம்தேதி வெள்ளிக்கிழமைதான் காயத்ரீ ஜபம் அனுஷ்டிக்கவேனுமென்று தோன்றுகின்றது. சிரௌதிகளவர்கள் பிராயச்சித்தமானதால் பிரதமை ஸங்கவாந்தமிருப்பதால் 13உ தான் அனுஷ்டிக்கவேணுமென்கிறார்கள். ஆனதால் காயத்ரீ ஜபத்தை என்றையதினம் செய்யவேணுமென்பதை பத்திரிகைமூலமாய்த் தெரிவிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

## இதற்கு ஸமாதானம்.

கீழ்க்காட்டிய வசனங்களின் பொருளிது "பர்வப்பிரதிபத்துக்களின் ஸந்தி ஸங்கவ காலத்திற்குப்பின் ஆவர்த்தனமென்ற காலத்திற்கு முன்னிருந்தால் அன்றைக்கே காயத்திரியால் ஸமிதாஹுதியையாவது காயத்திரீஜபத்தையாவது ஸங்கவ காலத்தில் செய்துவிட்டு அன்றைக்கே மத்தியான்னத்தில் உபாகர்மத்தைச் செய்யவேண்டும். ஸங்கவத்திற்குமுந்தியே பர்வப்பிரதிபத்ஸந்தி நேர்ந்தால் முதல்நாள் உபாகர்மமும், மறுநாள் காயத்திரீ ஜபமும் செய்யவேண்டும் என்று, இந்த வசனங்களால் ஸங்கவாரம்பம்முதல் ஸங்கவஸமாப்தி பரியந்தம் என்றைக்குப் பிரதமை அதிகமாயிருக்கின்றதோ அன்றைக்கு காயத்ரீ ஜபம் செய்யவேண்டுமென்று சூசிக்கப்பட்டதாகிறது. அது ஆவணிமீ 13உ சனியென்றே இருப்பதால் அன்றைக்கே இவ்வருஷத்தில் காயத்திரீ ஜபத்தைச் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தமாகிறது. ஆகையால் சிரௌதிகள் அவர்கள் பஞ்சாங்கத்தில் போட்டபடியே காயத்திரீ ஜபத்தைச் செய்யவேண்டும்.

---

## முடிகொண்டான் கிராமத்தில் கும்பகோணம் அத்வைத ஸபை.

கும்பகோணம் அத்வைதஸபா வித்துவான்களின் 37-வது வருஷத்திய வருஷாந்தர ஸபையானது ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்களின் பரிபூர்ண அனுக்கிரஹத்தை முன்னிட்டு நன்னிலம் தாலூகா

முடிகொண்டான் கிராமத்திய மிராசுதார்களின் ஆதரவில் ஷை முடிகொண்டான் கிராமத்தில் 1931௵ ஜூன்௴ 19௳க்குச் சரியான பிரஜாபதி௵ ஆனி௴ 4௳ வியாழக்கிழமை காலையில் 8½ மணிக்குமேல் துவக்கம்செய்து வழக்கம்போல் ஒருவாரம் நடைபெற்றது. ஆனி௴ 4௳யன்று காலையில் எல்லோர்களும் ஸ்னானஸந்தியாவந்தன தேவபூஜாதிகளான நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டவுடன் 7-மணி சுமாருக்கு ஸ்ரீமத் ஆதி பகவத் பாதாசாரியஸ்வாமிகளவாளின் திருவுருவப்படத்தை நன்கு அலங் காரத்துடன் உபநிஷத் பாராயணத்துடனும் வாத்தியகோஷத்து டனும் கையிலேந்திக் கிராமத்தார் அனைவரும் சூழப் பண்டிதர் களை மகா-ா-ா-ஸ்ரீ பஞ்சாபகேசய்யாவர்கள் ஜாகையிலிருந்து ஸபை நடத்துமிடமாகக் கற்பிக்கப்பட்டு பந்தல்களாலும் வாழை தோரணம் தேர்ச்சீலை முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்ட விஷ்ணு ஆலயத்திற்கு அழைத்துச்சென்று ஸ்ரீபகவத்பாதாளு டைய பூஜாபுரஸ்ஸரமாகப் பூர்வசாந்தியும்சொல்லிக் குரு வந்தன மும்செய்து முடிந்தவுடன் கிராம மஹாஜனங்களால் ஸம்ஸ்கிருத சுலோகரூபமான வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட் டது. (அது அடுத்த ஸஞ்சிகையில் வரும்.) பிறகு ஸபை ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் ஒருவாரம் காலை 7-30 மணி முதல் 11-மணிவரையிலும், மாலை 3-மணிமுதல் 4½-வணிவரை யில் ஸ்ரீ பகவத்கீதை, உபநிஷத், ப்ரம்மஸூத்திரம் இவைகளின் பாஷ்யங்களிலும், பிரகரணங்களிலும், லேகனவாசிக ரூபமான பரீக்ஷைகளும், வாக்கியார்த்தங்களும் நடைபெற்றன. பிரதிதின மும் மாலை 4½-முதல் 6-மணிவரை ஷை ஸபைக்கு விஜயம் செய் திருந்த வித்வான்களால் ஸ்ரீ பகவத்கீதையில் உபன்யாஸங்களும், இரவில் 7½-மணிக்குமேல் ஸபாபரீக்ஷாதிகாரிகளால் குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றிய அரிய உபந்யாஸங்களும் ஸபையோர்கள் ஆனந்திக்குமாறு நடத்தப்பட்டன. ஜூன்௴ 25௳ வியாழக்கி ழமை காலை 8½-மணிக்கு உத்தரசாந்தி குருவந்தன பூர்வகமாக ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்கிரஹத்துடன் வித்துவான் களுக்கு ஸம்மானங்களும் செய்யப்பட்டன. பிரதி தினங்களி லும் பண்டிதர்களுக்குச்செய்த போஜனாதி ஸத்காரங்கள் அந்தக் கிராமத்திற்கு அமைந்த பாத்துவாஜாசிரமமென்ற பெயர் உண்மை யிலே அமைந்ததென வெளியிட்டன. ஸமாப்தி தினத்தில்—

"இந்த அத்வைத ஸபையானது மன்னார்குடியில் விளங்கிவந்த பெரியவாள் அவர்களால் அனுக்கிரஹத்தோடு முதலில் ஆரம்பிக்கப்பட்டபடியால் நாளதுவரை யாதொரு இடையூறுமின்றி வருஷத்திற்கு வருஷம் அதிக சிறப்புடனும் உற்சாகத்துடனும் அபிவிருத்தியடைந்துவந்திருக்கிறது. ஷை பெரியவாளுடைய ஞாபகார்த்தமாகப் பெரியவாள் பெயராலேயே ஒருபாடசாலையை ஏற்படுத்தி பாடப்பிரவசனம் நடந்து வரும்படி ஸபையின் மூலமாகவே செய்யவேண்டுமென்ற ஸபை மெம்பர்களின் தீர்மானப்படிக்கும், ஸபையின் நோக்கத்திற்கும் அனுகுணமாக இப்பொழுதே ஒரு நல்ல நாள்பார்த்து அதை ஆரம்பிக்கவேண்டுமென்று ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது. கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி பரமாசார்யாள் அனுக்கிரஹத்தை முன்னிட்டு அந்தப்பாடசாலை ஆரம்பமாகுமென்று ஆவலுடன் எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஸபையின் உத்தேசப்படி ஷை ஸபாபண்டிதர்களான ப்ரம்மஸ்ரீ சாஸ்திர ரத்னாகரம் ஹோபதேசகர் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் வாரத்தில் இரண்டு நாள் ஸ்ரீபரமாசார்யாள் ஸ்ரீமடத்தில் ஸ்ரீபாகவதோபந்யாஸம் செய்துவருகிறார்கள். பலபேர்கள் பக்தியுடன் சிரவணம்செய்து பரமாநந்தத்தை அநுபவிக்கிறார்கள். இவ்விதமாக ஸத்திய ஸங்கல்பரான பெரியவாள் ஆரம்பித்த ஸபை சிறப்புற்றோங்கி வளங்கி வருவது எல்லோருக்குமே அளவிலா ஆனந்தத்தை அளிக்கின்றது.

---

## வாரவிருத்தாந்தம்

கலிதூதர்:—இந்தியாவுக்குப் பிரதிநிதியாக காங்க்ரஸின் தூதராக சீமைபோய் ஸ்ரீ காந்தி பேசப்போகிறார். அது எப்படியோ? தற்சமயம்கலிமஹாராஜனின் தூதராக இருந்து, வேண்டியதற்கதிகமாகவே அதர்மத்தை விருத்திசெய்கிறார். காச்மீரிஹிந்துக்கள் விதவாவிவாஹம்செய்வதில்லை, அவர்கள்விதவாவிவாஹம்செய்யும்படி ஸத்யாக்கிரஹம்செய்யத்தூண்டுகிறார். ஸ்வஜாதிஸ்திரீகள் ஸம்மதிக்காவிட்டால் தாழ்ந்தஜாதிவிதவாஸ்திரீயை மணப்பதாக வற்புறுத்தவேண்டுமென உபதேசிக்கிறார். ஆஹா ! என்ன உப

தேசம்! ஆஸ்திகர் எழுந்து தர்மோபதேசஞ்செய்ய இது தூண்டு கோலாகும்.

சாரதா கவனிப்பாரா? சாரதாவும் அவரது ஸகாக்களும் இந்தியாவுக்குப் பேருபகாரம் செய்ததாகவும் அவர் பெயரை இந்திய சட்டசபையில் தங்க எழுத்தில் எழுத ஓர் பித்தன் தனம் தருவதாகவும் எண்ணி அகமழ்வோர் இதற்கென்ன பதில் சொல்வர்? பாம்பேயில் 12-வயதில் ஓர்பெண் ஓர் புருடனுடன் நட்புகொண்டனள். அவள் தந்தை அவனைவிட்டு வேறொருவனுக்கு மணம் புரிய யோசித்தனர். அப்பெண் 14-வது வயதில் அவனுடன் ஓடிவிட்டாள். தந்தை சிந்தைகலங்கி வியாஜ்ஜியம் கொடுக்க அவள் கோர்ட்டில் தன் காதல் கடிதங்களைக்காட்டி இவனையே மணப்பேனென்கிறாள். முடிவு பின்வரும். பால்யவிவாஹம் நடக்காவிடில் மற்றும்பலதொல்லைகள் வரப்போகின்றன. மதமே வேண்டாம், மாடுபோலிருப்போம் என்பவருடன் நமக்கேது பேச்சு.

அதர்மமே காரணம்:— புதுக்கோட்டை அரசாங்கம் தைவிகமானதென்றும் அதன் தொண்டாக அரசிருப்பதாகவும் ஐதிஹ்யம். தற்காலம் அத்தேசத்தில் நடந்த பற்பல தர்மாதிக்ரமத்தால் குடிகள் மூலம் சொல்லொணாத் துன்பத்தை அரசாங்க அதிகாரிகள் அனுபவிக்கின்றனர். இதனால் குடிகளது குரூரச்செயலை நாம் ஆதரித்ததாகாது. பழையபடி தர்மம் தவறாதிருந்தால் அரசரும் குடிகளும் ஸுகம்பெறுவர்.

धर्मो रक्षति रक्षितः ।

வழிகாட்டுகிறது:—கும்பகோணத்தில் ஸ்ரீ சாரங்கபாணி கோவிலில் ஆண்டாள் திருமண விஷயமாக பக்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மனக்கசப்பேற்பட்டு ஆங்கிலக்கோர்ட்டில் வியாஜ்யம் நடக்கவிருக்க ஆங்குள்ள பண்டிதரத்னங்கள் ஒன்றுசேர்ந்து சர்ச்சைசெய்து ஸமரஸமான ஓர் முடிவிற்குவர முயல்கின்றனர். அதைக் கலைக்கச் சிலர் முயற்சிப்பதாகத் தெரிகிறது. எல்லோரும் ஒன்றுகூடி முடிவிற்கு வருவதே அழகு. காமக்ரோதாதிகளையகற்றி சாந்தியை அளிக்கும் பரமபாவனமான பகவத்மூர்த்திகளையோ தத்ஸம்பந்தமானதையோ கோர்ட்டில்கொண்டு நிறுத்துவது அழகல்ல. மற்ற ஊராரும் இதைப்பின்பற்றுக.

இதுவும் ஓர் பிழைப்பா? சிதம்பரம்தாலூக்கா நளம்புத்தூர் என்ற கிராமத்தில் சிவாலயத்திலிருந்து பற்பல விக்ரஹங்களும் மாயவரம் தாலூக்கா வடவன் என்ற ஊரிலிருந்து சில விக்ரஹங் களும் களவாடப்பட்டன. பாண்டிச்சேரியிலுள்ள ஒருவர் இவைகளைப் பாரிஸ்நகரத்திற்கனுப்புவதாக வதந்தி இருக்கிறது. ஆர்க்கலாஜிகள் வகுப்பைச்சார்ந்தார் இவைகளைச் சேகரித்து காக்ஷிசாலையில் வைப்பதுண்டு. இவ்வேலையை யார்செய்தாலும் மன்னிக்கத்தகாத குற்றமே. இதை விற்று வயிறு வளப்பதைவிட இறப்பதேமேல்.

தானே தேடியதீங்கு:—ஆண்மக்களைப்போல் பெண்களும் கல்வி கற்கையால் அதற்கு அங்கமான எல்லாவேலையையும்செய்ய வேண்டியிருக்கிறது. மதுரைப் பெண்கலாசாலைத் தலைவிக்கு ஓர் பரிவுபசாரம் நடந்தது. அதில் வண்டியூர் தெப்பக்குளத்தி லுள்ள மத்யமண்டபத்தில் தேக்கச்சேரி என்பதோர் உப அங்க மாகும். இதற்கா அந்த இடம்? அங்கு செல்லும்போது தோணி கவிழ்ந்தது. பல பெண்கள் ஜலத்தில் மூழ்கி மீனாக்ஷி அருளால் சாகாமல் ஆஸ்பத்திரியிலிருக்கின்றனர். என்ன விந்தை? பெற்றோர் கவனிக்க!

மதிக்கலாமா; குடி அரசெனும் பத்திரிகை பல விஷயங் களைக் கக்குகிறது. அதில் ராமாயண ஆராய்ச்சி எனப்பெயர் வைத்து நாஸ்திகத்தை ஊட்டுவதொன்று. அதைக்கண்டித்து சிவநேசன்பத்திராசிரியர்மறுப்பெழுதினர். அதைத்தனிபுத்தகமாக "ஆஸ்திகதருமசர்வஜனசங்கத்தின்" சார்பாகஸ்ரீமான்காஞ்சிவாஸ தேவய்யர் வெளியிட்டிருக்கிறார். 12-ம் பக்கம் புத்தகம்விஷயம் நோக்கம் எல்லாம்ஸரியே. ஆனால் இதுபோன்றதைக் கண்டிப்ப தென்ற விஷயமாக அப்பத்திரிகைக்கு ஓர் மதிப்பு கொடுப்பதுஉசி மா என்பதே யோசிக்கத்தக்க விஷயம். இதுபோன்ற விஷயங்க ளைக் கண்டுகொள்ளாமல்விட்டு ஆஸ்திகத்தை ஊட்டத்தக்க விஷ யங்களை அச்சிட்டு இலவசமாக வழங்கிற்பயனுண்டு. பிரசுர கர்த்தாவது நோக்கத்திற்கு நன்றி பல.

வே. ஸோமதேவ சர்மா.

# ஸ்ரீ வியாஸபூஜா
## சாதுர்மாஸ்ய மஹோத்ஸவம்.

ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளின் ஸர்வக்ஞ பீடாரோஹண ஸ்தானமாயும், ஸாக்ஷாத் அதிஷ்டானஸ்தானமாயுமிருக்கிற ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தின்கண் விளங்காநிற்கும் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி கும்பகோண நிவாஸிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் சிஷ்யகோடிகளை அனுக்ரஹிக்கும்பொருட்டு விஜயயாத்திரையாகப் புறப்பட்டு காவேரி தீரத்திலுள்ள ஜம்புகேச்வர க்ஷேத்திரத்தில் பூர்வம் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாளால் ஸ்ரீ அகிலாண்டேச்வரி அம்பாளுக்கு பிரதிஷ்டை செய்விக்கப்பட்ட ஸ்ரீ சக்கிரதாடங்கங்களை ஜீர்ணோத்தாரணப் பிரதிஷ்டைசெய்து கன்னியாகுமாரி பரியந்தமான அநேக தீர்த்த க்ஷேத்ராடனங்களைச் செய்துகொண்டு பிரகிருதம் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளால் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ காமாக்ஷி ஆலய ஜீர்ணோத்தாரணத்தை உத்தேசித்து ஸஞ்சாரம் செய்துவரும் கிரமத்தில் வியாஸபூஜா மஹோத்ஸவதினமாகிய நாளது பிரஜாபதி-ஞு ஆஷாட சுத்த பூர்ணிமை ஆடி-மீ 14உ (29-7-31) புதன்கிழமைமுதல்விசுவரூப யாத்திரா மஹோத்ஸவ தினமாகிய பாத்திரபத சுத்த பூர்ணிமை (புரட்டாசி-மீ 10உ சனிக்கிழமை) பரியந்தம் இரண்டு மாத காலம் இவ்வருஷத்திய சாதுர்மாஸ்ய விரதத்தை * சித்தூரில் நடத்துகிறபடியால் ஸ்ரீ மடம் சிஷ்யகோடி மஹாஜனங்கள் முதலானயாவரும் வந்திருந்து சாதுர்மாஸ்யப்ரயுக்தமாய் நடக்கும் ஸ்ரீ ஸ்வாமிபூஜாப் பிராம்மணஸந்தர்ப்பணாதிகளையும் வித்வத்ஸபைகளையும் கிரமப்பிரகாரம் நடத்திவைத்து வியாஸாக்ஷத ப்ரஸாதம் பெற்று ஐஹிகாமுஷ்மிக பலன்களை அடையவேண்டுமாய்க் கோரப்படுகிறது.

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி,
ஸ்ரீகாரியம் K. குப்புஸ்வாமி அய்யர்.

---

* சித்தூர் என்பது காட்பாடியிலிருந்து 2-வது ஸ்டேஷன்,